அவர்களுடைய வழிகாட்டுதல்களோடு இந்த மாமன்றம் நிச்சயமாக, துணிவாக, தைரியமாகத் தமிழ்நாட்டு மக்களுக்காகச் சிறந்த பணியை ஆற்றும், இந்தியாவிலேயே தலை சிறந்த மாநிலமாக விளங்கும் என்று கூறி காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

11–00 மணி

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துள்ளது குறித்தும் அவையில் அவருக்கு இடம் ஒதுக்கப் பெற்றுள்ளது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

"Thiru K.K.S.S.R. Ramachandran, who has been elected as a Member belonging to the Anna Puratchi Thalaivar Tamizhaga Munnetra Kazhagam Party from Sattur Constituency, has in his letter addressed to me stated that the said party has split vertically and that he and his supporters have joined the All India Anna D.M.K. Party and hence has requested that he may be allotted a seat along with AIADMK members in the House. The General Secretary of AIADMK Party has also informed me that he has been admitted in AIADMK Party. Accepting the request of the Member, I have decided that he shall be allotted with a seat in AIADMK block. Since the member had already been allotted a seat in the capacity of an Ex. Minister, he will continue to occupy the same seat".

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். அதிகமான உறுப்பினர்கள் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10, 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் ஒவ்வொருவரும் பேசி முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மணி அடிக்காமல் முடிக்க வைக்க வேண்டும் என்று மிகுந்த சிரமத்திற்கு இடையில் ஒவ்வொருவருக்கும் சைகை காட்டிப் பார்க்கிறேன். மணி அடிப்பதற்குள் அவர்கள் பேச்சை முடித்தால் நல்லது என்று கருதுகிறேன். அந்த 10, 10 மணித்துளிக்குள் பேசி